# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

### இந்திய கடற்படைக் கப்பலான குதர் கொழும்பு விஜயம்

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட குக்ரி ரக கப்பலான இந்திய கடற்படைக் கப்பல் குதர் மூன்று நாள் விஜயமாக 2025 மார்ச் 03 ஆம் திகதி அன்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது. இலங்கை கடற்படை இசைக்குழுவின் இசையுடன் இலங்கை கடற்படை அதிகாரிகளால் இக்கப்பல் பாரம்பரிய முறைப்படி வரவேற்கப்பட்டது. இவ்விஜயத்தின் அங்கமாக இக்கப்பலின் கட்டளை அதிகாரி தளபதி நிதின் சர்மா அவர்கள் மேற்கு கடற்படைப் பிராந்தியத்தின் தளபதி ரியர் அட்மிரல் எம்.எச்.சி.ஜே. சில்வா அவர்களைச் சந்தித்திருந்தார்.

2. இதேவேளை இக்கப்பலில் நடந்த ஒரு நிகழ்வில், இலங்கை கடலோர காவல்படை கப்பலான சுரக்ஷாவில் பொருத்தப்பட்டுள்ள முக்கிய பாதுகாப்பு அமைப்பின் அத்தியாவசிய அங்கமான தீயணைப்பு அமைப்பிற்கான வாயு கொள்கலன் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டிருந்தது. இலங்கையின் கடலோரக் காவல் படையின் சுரக்ஷா கப்பல் 2017 அக்டோபரில் இந்திய அரசாங்கத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்ட ஒரு கடல்சார் ரோந்து கப்பலாகும். அத்துடன் இக்கப்பலுக்கான உதிரிப்பாகங்கள் 2021 ஜூன், 2022 ஏப்ரல் மற்றும் 2024 ஜூன் ஆகிய காலப்பகுதிகளில் இந்தியாவால் நன்கொடையாக வழங்கப்பட்டது. மேலும் 2024 ஜனவரியில் இக்கப்பலின் வாயு கொள்கலன்களை மீள் நிரப்புவதற்கும் இந்தியா ஆதரவினை வழங்கியிருந்தது.

3. இக்கப்பலானது கொழும்பில் தரித்துநிற்கும் காலப்பகுதியில் இரு கடற்படைகளுக்கும் இடையே சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்வதை நோக்கமாகக் கொண்டு இலங்கை கடற்படை வீரர்களுடன் தொழில் ரீதியான பயிற்சி அமர்வுகள் நடைபெறும். .அத்துடன் இக்கப்பலைச் சேர்ந்த அதிகாரிகளுக்காக VBSS மற்றும் படை பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த செயல்விளக்க அமர்வு இலங்கை கடற்படையால் நடத்தப்படும், மேலும் இலங்கை கடற்படை அதிகாரிகளுடன் இணைந்து விளையாட்டு மற்றும் யோகா நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

4. அத்துடன், பிராந்தியத்தில் காணப்படும் கடல்சார் பாதுகாப்பின் பொதுவான சவால்களை திறம்பட எதிர்கொள்வதற்காக இலங்கை கடற்படையின் திறன்களை அதிகரிப்பதற்காக இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான ஒத்துழைப்புக்கான சாத்தியக்கூறுகளைக் கவனத்தில் கொள்ளும் நிலையில் இந்திய கடற்படைக் கப்பலான குத்தாரின் விஜயமும் மிகவும் முக்கியமானதாகும். இக்கப்பல் 2025 மார்ச் 06 ஆம் திகதி இலங்கையிலிருந்து புறப்படும்.

5. இதேவேளை இந்திய கடலோர காவல்படை கப்பல்களான வைபவ் மற்றும் அபிராஜ் ஆகியவை கொழும்பு மற்றும் காலிக்கு 2024 டிசம்பர் 23, மற்றும் 2025 ஜனவரி 02 ஆகிய திகதிகளில் விஜயம் செய்திருந்தமை நினைவில் கொள்ளத்தக்கதாகும். அத்துடன் இந்திய கடற்படை மற்றும் கடலோர காவல்படை கப்பல்கள் இலங்கைக்கு விஜயம் செய்வது இந்தியாவின் 'அயலுறவுக்கு முதலிடம் கொள்கை மற்றும் பிரதமரின் SAGAR

(பிராந்தியத்தில் உள்ள அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி) தொலைநோக்குப் பார்வையினை அடிப்படையாக கொண்ட்துடன் இரு நட்பு நாடுகளினதும் கடற்படைகள் மற்றும் கடலோர காவல்படைகளுக்கு இடையே நட்புறவு மற்றும் செயல்திறனை வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

***************

**கொழும்பு**
**03 மார்ச் 2025**